அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2023

# தமிழ்

# ஆண்டு 10

| | |
|---|---|
| **நேரம்:** 180 மணித்துளிகள் | **மொத்தப்புள்ளிகள்:** 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்:** 03.06.2023 | **பக்கங்கள்:** 20 |

**சுட்டெண்:** | | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1. தொல்காப்பியத்தின் உரையாசிரியர்களுள் ஒருவர்
   1. பரிமேலழகர்
   2. அடியார்க்கு நல்லார்
   3. சி.வை.தாமோதரம்பிள்ளை
   4. இளம்பூரணர்

2. பாட்டி கூறிய கதையைக் கேட்டு மகிழ்ந்தான். இதில் வந்துள்ள வினையெச்சம்
   1. அவன்
   2. கேட்டு
   3. கூறிய
   4. மகிழ்ந்தான்

3. எத்தடை வந்தபோதிலும் இலக்கை அடைவதில் குறியாக இருக்க வேண்டும் என்ற பொருள் தரும் பழமொழி
   1. எய்தவன் இருக்க அம்பை நோவானேன்?
   2. மழைக்கால இருட்டானாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது
   3. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதே
   4. இளங்கன்று பயமறியாது

4. மொழிக்கு இறுதியில் வராத மெய்யெழுத்து
   1. ய்
   2. ம்
   3. ங்
   4. ழ்

5. அரங்கு என்ற சொல்லுக்கு மாற்றாக இன்று பெருவழக்காக இருப்பது
   1. இடம்
   2. அமர்வு
   3. மேடை
   4. இருக்கை

6. சிறுமியின் சட்டை தொளதொள என இருந்தது. இதில் தொளதொள என்பது
   1. அடுக்கிடுக்குத்தொடர்
   2. இணைமொழி
   3. அடுக்குத்தொடர்
   4. இரட்டைக்கிளவி

1 2 3 4

7. இரண்டு + பத்து என்பதைச் சேர்த்து எழுதினால்
   1. இரண்டுபத்து
   2. இருபது
   3. இருவது
   4. இரண்டுப்பத்து

8. சங்க காலத்தின் பின்னர் தமிழர் தமிழ் நிலத்தில் தன்னாட்சியை நிறுவிய காலம்
   1. பல்லவர்காலம்
   2. சோழர்காலம்
   3. சங்கமருவியகாலம்
   4. ஐரோப்பியர்காலம்

9. எலியின் வாழிடம் வளை போல குருவியின் வாழிடம்
   1. பட்டி
   2. குகை
   3. புற்று
   4. கூடு

10. பிறவினைச்சொற்களின் விகுதிகள்
   1. பி, வி
   2. ப், வ்
   3. து, அ
   4. ன், ஆன்

11. புலவர்கள் வறுமையில் வாழ்ந்து வந்தனர். இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமையுருபு
   1. இல்
   2. அர்
   3. கள்
   4. து

12. நகமும் சதையும் போல என்ற உவமைத்தொடர் குறிக்கும் பொருள்
   1. எங்கும் பரவுதல்
   2. மிகக்கவனமாகப் பாதுகாத்தல்
   3. ஒட்டியிருத்தல்
   4. மிகுந்த மகிழ்ச்சி

13. அழுத்தமாகச் சொல்லுதல் என்பதன் பொருள்
   1. கூறுதல்
   2. செப்புதல்
   3. ஓதுதல்
   4. சாற்றுதல்

1 2 3 4

14. பயன்கலைகளுள் ஒன்று
    1. ஆடல்
    2. ஓவியம்
    3. நெசவு நெய்தல்
    4. சிற்பம்

15. யானையின் ஆண் களிறு போல யானையின் பெண்
    1. பெட்டை
    2. பிணை
    3. பிடி
    4. மறி

16. பொதுமொழிக்கு எடுத்துக்காட்டாக அமைவது
    1. பாகல்
    2. காற்று
    3. நில்
    4. அறம் செய விரும்பு

17. பத்தாம் நூற்றாண்டில் தமிழரது புலப்பெயர்வுக்குக் காரணமாக அமைந்தது
    1. எல்லை விரிவாக்கம்
    2. ஆள்புலம் இழந்தமை
    3. இன அழிப்பு
    4. பொருண்மியம்

18. இறந்தார் என்பதை இறைவனடி சேர்ந்தார் என்று கூறுவது
    1. இடக்கரடக்கல்
    2. மங்கலம்
    3. குழூஉக்குறி
    4. மரூஉ

19. எண்ணெய் என்பதைப் பிரித்து எழுதினால்
    1. எண் + நெய்
    2. எள் + னெய்
    3. எண் + ணெய்
    4. எள் + நெய்

20. உயர்திணை, பலர்பால், படர்க்கை வினைமுற்று
    1. மகிழ்கின்றீர்கள்
    2. நீந்தின
    3. நடித்தார்கள்
    4. ஓடினோம்

**1 2 3 4**

21. தென்னையின் தொகுதி தோப்புப் போல பூவின் தொகுதி
    1. கூட்டம்
    2. கற்றை
    3. குவியல்
    4. கொத்து

22. ஈழத்தில் குருமக்கலம் அரசியல் அமைப்பைக் கொண்டுவந்தவர்கள்
    1. ஒல்லாந்தர்
    2. பிரான்சியர்
    3. போர்த்துக்கேயர்
    4. பிரித்தானியர்

23. பகலவன், ஞாயிறு, பரிதி, வெய்யோன் போன்ற சொற்கள் தரும் ஒரு சொல்
    1. நிலவு
    2. விண்மீன்
    3. கதிரவன்
    4. திங்கள்

24. ஓரிடத்தில் அல்லது ஒரு செயலில் நிலைபெற்று நிற்றல் என்ற பொருள் தருவது
    1. வேரூன்றுதல்
    2. பதிவேற்றம்
    3. வலுப்பெறுதல்
    4. விரிவாக்கம்

25. பண்டைத் தமிழரது நடுகல் வழிபாடு பற்றிக் கூறும் சங்ககால நூல்
    1. மணிமேகலை
    2. அகநானூறு
    3. நாலடியார்
    4. புறப்பொருள் வெண்பாமாலை

(25 x 1 = 25 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சோழர்காலத்தில் தோற்றம் பெற்ற பெருங்காப்பியங்களுள் முழுமையாகக் கிடைக்காத காப்பியங்கள் எவை?

_______________________________________________

2. குறளின் பொருளை உமது உரைநடையில் எழுதுக.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

_______________________________________________

_______________________________________________

3. பிரித்தானியரால் கொண்டுவரப்பட்ட ஒற்றையாட்சியால் ஈழத்தமிழருக்கு ஏற்பட்ட விளைவுகள் இரண்டு எழுதுக.

_______________________________________________

_______________________________________________

4. 'இது தீர்வல்ல' என்ற சிறுகதை சொல்லும் செய்தி என்ன?

_______________________________________________

_______________________________________________

5. கீழ்வரும் தொடர்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.

பென்னம்பெரிய: _______________________________________________

_______________________________________________

வளைந்து வளைந்து: _______________________________________________

_______________________________________________

6. கீழ்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

காரணச் சிறப்புப்பெயர்: ____________________ காரணப்பெயர்: ____________________

7. எடுத்துக்காட்டுச் சொல்லியம் ஒவ்வொன்று எழுதுக.

ஐந்தாம் வேற்றுமை: _______________________________________________

எட்டாம் வேற்றுமை: _______________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**3. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

புறப்படத் தயாராகுங்கள் கிழக்கினை நோக்கி
புதிய விடிவொன்றைத் தேடுவோம் - இல்லையேல்
இரவுகளை இல்லாது ஒழிப்போம்!
எழுதுகோலையும் கலப்பை முனையையும்
முகில்களைக் கிழிக்கும் ஆயுதமாக்குவோம்
முகிலினை விலக்கி புதிய ஒளியினைத் தேடுவோம்!
காற்றைப் போலன்றி பெரும் புயலாக
எல்லோர் மூச்சையும் கடும் சூறாவளியாக்கி
புறப்படத் தயாராகுங்கள்!

- ஈரத்தி

1. எத்திசையை நோக்கிப் புறப்படத் தயாராக வேண்டும்?

_______________________________________________

2. எதனைத் தேடுவோம் என்று கூறப்பட்டுள்ளது?

_______________________________________________

3. எவற்றை முகிலினைக் கிழிக்கும் ஆயுதங்கள் ஆக்குவோம்?

_______________________________________________

4. எதனைச் சூறாவளியாக்க வேண்டும்?

_______________________________________________

(4 X 1 = 4 புள்ளிகள்)

**4. பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

ஈழத்தை இறுதியாக ஆட்சி செய்த ஐரோப்பியர் பிரித்தானியர். இவர்கள் 1948இல் நாட்டைவிட்டு வெளியேறும்போது ஈழத்தை ஆளுகின்ற உரிமையைச் சிங்களவரிடம் ஒப்படைத்துச் சென்றனர். அதன்பின் ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்களால் தமிழரது குடியுரிமை, மொழியுரிமை, கல்வியுரிமை, வாழ்வுரிமை என்பன பறிக்கப்பட்டன. அதனால், தமிழர் தமது உரிமைகளுக்காக அமைதிவழியில் போராடத் தொடங்கினர். தமிழரது அமைதிவழிப் போராட்டத்தைச் சிங்கள அரசு ஆயுத வழியில் ஒடுக்கியது. அத்தோடு, தமிழர் மீது திட்டமிட்ட இனவழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்நிலையில் தமிழினம் தனது இருப்புக்காக ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. 1980களுக்குப் பின்னர் சிங்கள அரசு தமிழின அழிப்புப்போரை முனைப்படையச் செய்தது. இதனால், பல்லாயிரம் தமிழ் மக்கள் தமது உடைமைகளை இழந்து சொந்த மண்ணிலேயே இடம்பெயர்ந்து ஏதிலிகளாயினர். உணவு, உடை, மருந்துகள் இன்றி அல்லற்பட்டனர். தமிழினம் 2009 மே மாத நடுப்பகுதி வரை சிங்கள அரசின் வெளிப்படையான தமிழின அழிப்புப் போரை எதிர்கொண்டது. அதன் பின்னர் இன்றுவரை மறைமுகமான இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு முகங்கொடுத்து வருகிறது.

(3 புள்ளிகள்)

5. **தரப்பட்டுள்ள சொல்லியங்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.**

**ஆங்கிலம்:**

Iniyan is in Year 10 in his Tamil school. He is fond of learning Tamil. He has many friends in Tamil school. He mixes lovely with everyone. His Tamil teacher told a story to the students about ‘The Unity’. Iniyan and the other students who were listing the story committed to be united.

**யேர்மனி:**

‘Iniyan geht in die 10. Klasse auf der Tamilschule. Er mag es sehr die tamilische Sprache zu erlernen. Er hat viele Freunde auf der Tamilschule. Er geht mit allen sehr liebevoll um. Sein Klassenlehrer erzählte den Schülern eine Geschichte mit dem Titel „Eintracht“. Iniyan und die anderen Schüler, welche die Geschichte hörten, riefen: „Lasst uns in Eintracht sein“.

**நோர்வே:**

Iniyan går i 10. klasse på tamilskolen. Han liker å lære tamil. Han har mange venner på tamilskolen. Han er vennlig med alle. Klasselæreren hans fortalte en fortelling med samhold som tema. Etter at Iniyan og de andre elevene hørte fortellingen sa de: "La oss leve i samhold."

**இத்தாலி:**

Iniyan frequenta la decima classe nella scuola Tamil. Lui ha molto piacere nello studiare la lingua Tamil. Lui ha molti amici nella scuola Tamil. E’ gentile con tutti. L’insegnante della sua classe ha raccontato una storia sul tema dell’unione. Sentendo la storia Iniyan ha detto agli altri studenti: “noi dobbiamo essere tutti uniti”.

**நெதர்லாந்து:**

Iniyan zit in groep 10 op Tamilschool. Hij is dol op het leren van Tamil. Hij heeft veel vrienden op Tamilschool. Hij is aardig tegen iedereen. Zijn leraar vertelde een verhaal over het onderwerp. Toen Iniyan en zijn klasgenoten dit verhaal hoorden, zeiden ze “we zullen allemaal samen blijven”.

**டென்மார்க்:**

Iniyan går i tiende klasse i tamilskolen. Han kan rigtig godt lide at lære det tamilske sprog. Han har mange venner på tamilskolen. Han er altid venlig mod alle. Hans klasselærer fortalte en historie med titlen 'Sammenhold' til eleverne. Iniyan og de andre elever, som lyttede til historien, sagde, "Vi vil alle sammen holde sammen".

**சுவீடன்:**

Iniyan läser åk 10 på tamilskolan. Att studera tamil tycker han väldigt mycket om. Han har flera vänner på tamilskolan. Han umgås med alla på ett trevligt vis. Hans klasslärare berättade en berättelse med titeln “sammanhållning” till eleverna. Iniyan och de andra eleverna som lyssnade på berättelsen sade “vi alla kommer att vara sams”.

**பின்லாந்து:**

Iniyan opiskelee tamili koulussa kymmenes luokkaa. Hän on kiinnostunut tamilin opiskelusta. Hänellä on kavereita tamili koulussa. Hän on ystävällinen ja on kaveri kaikkien kanssa. Hänen luokan opettaja kertoi tarinan yhtenäisyydestä. Kun Iniyan ja muut oppilaat kuulivat tarinan, he sanoivat.

**தமிழ்:**

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

(4 புள்ளிகள்)

**6. தரப்பட்டுள்ளவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து ஆறு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. வீரம்

**2.**



(4 புள்ளிகள்)

**7. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தொல்காப்பியம்
2. ஊடகத்தமிழ்
3. புலம்பெயர் நாடுகளில் தமிழர்

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- வாழ்க்கை முறை
- கல்வியும் தொழில் வாய்ப்புகளும்
- தாயகம் நோக்கிய செயற்பாடுகள்

(15 புள்ளிகள்)

## பகுதி 2

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

ஓர் இனத்தின் பண்பாடானது அதன் இலக்கியம், நடையுடை, கலைகள், வழிபாடு, அரசியல், குமுகாயம், அறிவியல், கல்வி எனப் பல்வேறு விடயங்களை உள்ளடக்கியது. அவ்வகையில், தமிழரது பண்பாடு விழுமியங்கள் நிறைந்தது. பழந்தமிழரது குமுகாயவாழ்வு நிலத்தோடு இயைந்தது. தாம் வாழ்ந்த நிலங்களை நான்காக வகுத்து, அந்நிலங்களுக்கு ஏற்றவாறு தொழில், வழிபாடு போன்றவற்றை அமைத்தனர். வாழ்க்கையை அகம், புறம் என இரண்டாகப்பகுத்து அவற்றிற்கு இலக்கணம் வகுத்தனர். அகவாழ்வில் காதலும் இல்லற வாழ்வும், புறவாழ்வில் போர், அரசியல், கொடை போன்றவையும் அடங்கும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று வையக மக்கள் அனைவரையும் தம் சுற்றமாக எண்ணுகின்ற வையகப் பொதுமை கொண்டது தமிழினம். வீரமும் போர் வெற்றிகளும் நிரம்பப்பெற்ற அரச சபையிலே மன்னனுக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்துபவர்களாகக் கல்வியறிவு நிரம்பப்பெற்ற புலவர்கள் இருந்தார்கள். இது தமிழர் கற்றோரைப் போற்றியமைக்குச் சான்றாகும். பண்டைத்தமிழர் இத்தகைய தனித்தன்மையான பண்பாட்டு அடையாளங்களை அழியாது பேணினர். அவற்றைத் தங்கள் அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கையளித்தனர். இதனால், தமிழர் பண்பாட்டு அடையாளங்கள் சிதைவுறாமலும் அழிந்துவிடாமலும் இன்றும் நிலைத்து நிற்கின்றன.

1. ஓர் இனத்தின் பண்பாட்டுள் அடங்கும் விடயங்கள் நான்கு எழுதுக.

_______________________________________________

_______________________________________________

2. பழந்தமிழர் வாழ்க்கையை எவ்வாறு பகுத்தனர் ?

_______________________________________________

_______________________________________________

3. தமிழினம் கொண்டுள்ள வையகப்பொதுமை யாது?

_______________________________________________

_______________________________________________

4. தமிழர் கற்றோரைப் போற்றினர் என்பதற்கான சான்று என்ன?

_______________________________________________

_______________________________________________

5. தமிழரது பண்பாட்டு அடையாளங்கள் இன்றுவரை நிலைத்து நிற்பதற்குக் காரணம் யாது?

______________________________________________

______________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**2. விளம்பரத்தை வாசித்து, தரப்பட்ட கூற்றுகள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளமிடுக.**

**கனடா கலைமகள் பதிப்பகத்தின் வெளியீடாக,**

**'ஞானஒளி' மாத இதழ்**

விளையாட்டு, இலக்கியம், அறிவியல் போன்ற பகுதிகளுக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

2023ஆம் ஆண்டு முதல் மாணவர்களுக்கான சிறப்புப் பக்கம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. பொது அறிவு, தாயகம், இணையவழிக்கல்வி சார்ந்த தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

உங்களுடைய ஆக்கங்களை எமது மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்.

பொருத்தமான ஆக்கங்கள் இதழில் இணைத்துக்கொள்ளப்படும்.

1. 'ஞானஒளி' என்னும் இதழானது ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படுகிறது. (    )

2. இவ்விதழில் இலக்கியப்பகுதி உள்ளது. (    )

3. இதனைக் கலைமகள் பதிப்பகத்தினர் வெளியிடுகிறார்கள். (    )

4. 2020ஆம் ஆண்டு மாணவர்களுக்கான சிறப்புப் பக்கம் இணைக்கப்பட்டது. (    )

5. அனுப்பப்படும் எல்லா ஆக்கங்களும் இதழில் இணைத்துக்கொள்ளப்படும். (    )

(5 X 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 04 | | | |
| 4 | 03 | | | |
| 5 | 04 | | | |
| 6 | 04 | | | |
| 7 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |